திரு. ம. சங்கரலிங்கம் : கன்னியாகுமரி மாவட்டத்தில நஞ்சை நிலங்களைத் தவிர வேறு நிலங்களே கிடையாது. எல்லாப் பகுதிகளிலும் நஞ்சை நிலம்தான் இருக்கின்றது. சிறிதளவு நிலம் ரோட்டுக்காக எடுக்கப்பட்டாலும், மற்ற பகுதிகளிலேயிருந்து அந்த விளைவுகளை எடுத்து ஈடுகட்டிக்கொள்ள முடியும். எனவே மக்கள் போக்குவரத்திற்காக, மக்களின் வசதிக்காக அரசினுடைய அந்தக் கொள்கையிலிருந்து, மொத்த மாநில அளவில் வைத்திருக்கின்ற அந்தக் கொள்கையிலிருந்து விலகி, அந்தப் பகுதியிலே இந்தத் திட்டத்தை வகுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : விதி விலக்கு அளிப்பது என்பது முறைதான். ஆனால், இதற்கு அந்த விதிவிலக்கு அளிக்க வேண்டுமா என்பதைப்பற்றி அரசு சிந்திக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களை பல ஆண்டுகளாக அரிஜன நலத் துறை அமைச்சர் என்றுதான் சொல்லி வந்தார்கள். இப்போது ஆதி திராவிடர் அமைச்சர் என்று ஏன் மாறுதல் பெற்றிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். அப்படியென்றால் திராவிடர் யார்? ஆதி திராவிடர் யார்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஆதி திராவிடர்—திராவிடர் என்பதற்கு, வித்தியாசம் தெரியாமல் இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். என்னை ஆதி திராவிடர் ஆக்கிக்கொள்வது என்றாலும், நான் கவலைப்படவில்லை.

எஸ்.எம்.ஆர்.வி. அரசு நெசவு பயிலகம்.

@ * 49 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980-81 கல்வி ஆண்டில், நாகர்கோவிலிலுள்ள எஸ்.எம்.ஆர்.வி அரசு நெசவு பயிலகத்தை, உற்பத்தி மையமாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

@ 29—1—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்தி வைக்கப்பட்டது.

1981 பிப்ரவரி 26]

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, நாகர்கோவிலிலே அமைந்துள்ள அரசு நெசவுப் பள்ளி தொழிற் பயிற்சி அளிக்கின்ற ஓர் பள்ளியாக நெசவுத் தொழில் பயிற்றுவிக்கின்ற ஓர் இடமாக இருக்கிறது. அதில் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் கணக்கு கொடுக்கப்பட்டது. அதை ஓர் உற்பத்தி மையமாக ஆக்கி, அதிலே பயிற்சி பெற்றவர்கள் அங்கே இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் அப்பரண்டீஸ் ஆகப் பணி செய்ய வேண்டும். அந்தப் பள்ளியே உற்பத்தி செய்கின்ற அளவுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி, அங்கு உற்பத்தி செய்வதன் மூலம் லாபத்தைத் தேடிக்கொள்ளும் வகையில் இருக்க வேண்டும். அதற்கென்று அந்தப் பகுதி மக்களிடமிருந்து வேண்டுகோள் வந்திருக்கின்றது. அதை அரசு பரிசிலனை செய்ததா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தமிழகத்தைப் பொறுத்தவரையில், கைத்தறி நெசவு ஒரு முக்கியமான தொழில். ஆகவே நெசவுத் தொழில் நுட்பம் தெரிந்த தொழிலாளர்கள் அரசுக்கு, கைத்தறித் துறைக்குத் தேவைப் படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று, அத்தகைய கருத்தை அடிப்படையாகக் கொண்டு இம்மாதிரி மாற்று வதற்கு வேண்டிய தேவை இப்போதுள்ளதால், இந்த நிலையத்தைக் கைத்தறி நெசவுத் தொழில் பயிற்சி நிலையமாக மாற்றலாம் என்பதை இந்த அரசு நிச்சயமாகப் பரிசிலிக்கும்.

தாழ்த்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு.

@ 50 வினா.—**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வி நிலையங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் தாழ்த்தப்பட்டோருக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 18 விழுக்காட்டை உயர்த்தும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது இருந்து உயர்த்தப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) & (இ) இதுபற்றிய குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 11-00)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: பிற்படுத்தப்பட்டோருக்குக் கல்வி நிலையங்களிலும் வேலை வாய்ப்புகளிலும் 31 சதவிகிதம் என்று ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தச் சலுகை 9,000 ரூபாய் வரை ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்குத் தான் என்று சொன்னபோது, அதை நீக்க வேண்டுமென்றுதான் எல்லோரும்

@ 29-1-1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.